பக்கங்கள்:-15

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 29 | திங்கட்கிழமை | 13.01.2025 | அதிர்வு 164

## எட்டு இந்திய மீனவர்களும் 22 வரை விளக்கமறியலில்

(எஸ்.நிதர்ஷன்)

மன்னார் வளைகுடா கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் நேற்று கைது செய்யப்பட்ட 8 இந்திய மீனவர்களும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில்

05



# எதிர்வரும் தேர்தல்களுடன் அநுரவின் ஆட்டம் முடிவுக்கு

## மொட்டுவில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் இணைக்கப் பேச்சு நடைபெறுகின்றது என்கிறார் நாமல்

**“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசின் மீதான மக்களின் நம்பிக்கை வெகுவாகச் சிதைவடைந்துள்ளது. ஆகவே, எதிர்வரும் காலங்களில் நடைபெறும் தேர்தல்கள் அரசுக்கு எதிரானதாக அமையும்.”**

**- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.**

05

# பாடசாலை மாணவி கடத்தல்: விசாரணை வேட்டை தீவிரம்

(க.கிஷாந்தன்)

கண்டி, தவுலகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பட்டப்பகலில் மாணவி ஒருவர் வானில் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட கறுப்பு வான் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதன் சாரதி நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார்.

பாடசாலை மாணவி ஒருவரை வலுக்கட்டாயமாக வானில் கடத்திச் செல்லும் காட்சிகள் அடங்கிய சி.சி.ரி.வி. காணொளிகள் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டு முஸ்லிம் பாடசாலை மாணவிகள் பிரதான வீதியில் நடந்து

05






நல்லாட்சி அரசின் கீழ், அதற்கு முந்திய ராஜபக்ஷகளின் ஆட்சிக்கால நிதி ஊழல்கள் குறித்து விசாரணை செய்வதற்காக நிறுவப்பட்ட நிதிக் குற்றங்கள் தொடர்பான பொலிஸ் பிரிவு கடந்த கோட்டாபய ராஜபக்ஷவினதும் தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்கவினதும் ஆட்சிக்காலங்களில் பெரும்பாலும் செயலிழந்து போனது.

அந்த நிதிக் குற்றப்பிரிவு விசாரணை செய்த பல குற்ற விடயங்கள் அரைகுறை நிலையில் கைவிடப்பட்டன.

இப்போதைய புதிய அரசு மீண்டும் அவற்றில் சில விடயங்களை மட்டும் கிளறி எடுத்து விசாரிக்கத் தீர்மானித்திருக்கிறது என்று தெரிகின்றது. அதனால் – பழைய நிதிக் குற்ற விசாரணைப் பொலிஸ் பிரிவை மீள இயக்க வேண்டிய தேவை வந்துள்ளது. எனினும் அதனைத் தனிப் பிரிவாக இயக்காமல் குற்றப் புலனாய்வுப் பிரிவின் கீழ் (சி.ஐ.டியின் கீழ்) தனியான அமைப்பாக இயக்க முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இதன்படி மேற்படி நிதிக் குற்றப்புலனாய்வு

05

# ஐ.தே.கவை மீளக் கட்டியெழுப்பினால் வெற்றி நிச்சயம்!

## அந்தக் கட்சியின் புதிய பொதுச்செயலாளர் தலதா நம்பிக்கை



ஐக்கிய தேசியக் கட்சியை மீளக் கட்டியெழுப்பினால் நிச்சயம் வெற்றி பெற முடியும் என்று அந்தக் கட்சியின் புதிய பொதுச்செயலாளர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

கொழும்பு – பிளவர் வீதியில் தொகுதி அமைப்பாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி இணைவு குறித்து 2020 செப்டெம்பர் மாதத்திலிருந்தே நாம் கலந்துரையாடியிருக்கின்றோம்.

அப்போது நான் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினராகக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தேன். பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் கபீர் ஹசீம் ஆகியோரை அழைத்து வந்து கலந்துரையாடியிருக்கின்றேன்.

இன்று இவ்விரு கட்சிகளுக்கும் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் அன்றே நாம் உணர்ந்தோம். இந்த அபாயத்தை உணர்ந்ததன் காரணமாகவே இணைந்து பயணிக்க வேண்டும் என்பதை ஆரம்பத்திலிருந்தே வலியுறுத்தினோம்.

அன்று ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெற்றிருந்ததால்தான் நாம் இவ்வாறான கோரிக்கையை முன்வைப்பதாகப் பெரும்பாலானோர் குறிப்பிட்டனர். ஆனால், இன்று என்னவாகியிருக்கின்றது?

கட்சிகள் இரண்டாக இருந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சியினரே இரு தரப்பிலும் இருக்கின்றனர். இதற்காக நானும் பிரதித் தலைவரும் அர்ப்பணிப்புடன் முயற்சித்து வருகின்றோம்.

அதற்கமைய பேச்சுகளையும் ஆரம்பித்திருக்கின்றோம். எவ்வாறிருப்பினும் எம்மால் இதனைத் தனித்துச் செய்ய முடியாது. கீழ் மட்டத்திலிருந்து சகலரும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

யானை சின்னத்தில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் ஜீவன் தொண்டமான் வெற்றி பெற்றிருக்கின்றார். அவராகவே கோரிக்கையை முன்வைத்து யானை சின்னத்தில் போட்டியிட்டார். எனவே, இதனை மீளக் கட்டியெழுப்பினால் நிச்சயம் எம்மால் வெற்றி பெற முடியும். இது யதார்த்தமாகும்.

ஐ.தே.கவின் பிளவில் நானும் தவறிழைத்தவளாகவே உணர்கின்றேன். அன்று அனைவரும் இணைந்து எடுத்த தீர்மானத்துக்கு நாம் இணக்கம் தெரிவித்தோம்.” – என்றார்.

# கச்சான் மூச்சுக்குழாயில் சிக்கி ஒன்றரை வயது குழந்தை சாவு

## சுன்னாகத்தில் பரிதாப சம்பவம்



கச்சான் மூச்சுக்குழாயில் சிக்கியதால் ஒன்றரை வயது பெண் குழந்தை ஒன்று பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் சுன்னாகம், ஐயனார் வீதி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சசிதரன் தனியா என்ற ஒன்றரை வயது பெண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் மேற்படி பெண் குழந்தை கச்சான் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது புரக்கடித்தது. பின்னர் அந்தக் குழந்தை இரவு நித்திரையாகிவிட்டது. நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் குழந்தை அழுததுடன் வாந்தியும் எடுத்தது. அந்தக் குழந்தை உடனடியாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் காலை 6.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

இந்த மரணம் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளைச் சுன்னாகம் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் சடலம் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்டதில் மூச்சுக்குழாயில் கச்சான் சிக்கியதால் மரணம் சம்பவித்தது என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.




# புதுக்குடியிருப்பு திம்பிலி பகுதியில் 'தூய்மையான இலங்கை' திட்டம்

(பா.சதீசன்)

"ஒரு செழிப்பான தேசம் ஒரு அழகான வாழ்க்கை" என்ற ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைய 'தூய்மையான இலங்கை' (ஊடநயெ ளுசை டுயமெய) எனும் திட்டமானது புதுக்குடியிருப்பு திம்பிலி பகுதியில் நேற்று காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு – திம்பிலி பகுதியில் அமைந்திருந்த நெல் களஞ்சிய சாலையானது கொரோனா காலப்பகுதிக்கு பின்னர் நெல் கொள்வனவு செய்யப்படாமையால் பல வருடங்களாக பாவனையற்று காணப்பட்டிருந்தது.

இதனால், பல சமூக சீர்கேடுகள், சட்ட விரோத செயற்பாடுகளும் அந்த இடத்தில் இடம்பெறுவதனால், அந்த இடம் தெரிவு செய்யப்பட்டு தூய்மையான இலங்கை எனும் செயற் திட்டதின் கீழ்

பொதுமக்களால் நேற்று துப்பரவு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி, இடத்தில் பொதுமக்களிடையே கலாச்சார உணர்வை மேம்படுத்தும் வகையில் முதற்கட்டமாக எதிர் வரும் தைப்பொங்கல் தினத்தன்று மாபெரும் பொங்கல் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள், கிராம மக்கள் இணைந்து இந்த பணியினை மேற்கொண்டிருந்தனர்.

















# ரணில் - சஜித் அணிகள் ஒன்றிணைய வேண்டும்

## இப்படி விரும்புகின்றார் நாமல்

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்கள் மீள ஒன்றிணைய வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் பழமையான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பலமடைய வேண்டும் என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைய வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வரும் நிலையிலேயே நாமல் ராஜபக்ஷ இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.





# பிறந்ததினத்தில் சிறுவர்களுக்கு உணவு வழங்க முன்வந்த சிறுமி

(பா.சதீசன்)

மாங்குளத்தில் அமைந்துள்ள நல்லாயன் சிறுவர் இல்லத்திற்கு சிறுமி ஒருவரின் பிறந்த தினத்தில் நேற்றைய தினம் மதிய உணவு வழங்கப்பட்டது.

புலம்பெயர் நாட்டில் தனது 13 ஆவது பிறந்ததினத்தை கொண்டாடும் ரி.டினோசா என்பவரின் பிறந்த நாளில் சிறுவர்களிற்கு உணவு வழங்கும் நோக்கில் சமூகப் செயற்பாட்டாளர் ஞா.யூட்சனால் நல்லாயன் சிறுவர் இல்லத்திற்கு நேரடியாக சென்று சிறுவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸ் பிரிவு தனியாக ஒரு பிரதி பொலிஸ் மா அதிபரின் கீழ் இயங்கும் அதேசமயம், தற்போதைய குற்றப்புலனாய்வுப் பிரிவையும் மேற்படி நிதிக் குற்ற விசாரணைப் பிரிவையும் சேர்ந்து சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவர் தமது கண்காணிப்பில் கொண்டு நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆட்சிக்கால ஊழல்களில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள், அரசியல்வாதிகள் பழையபடி இனி அடிக்கடி நிதிக் குற்றப் புலனாய்வு பொலிஸ் பிரிவுக்கு மாறி மாறி அணிவகுக்க வேண்டிய நிலை வரும் என எதிர்பார்க்கலாம்.

\+ + +

தற்போது, சீனாவில் புதிய வகை வைரஸ் நோய் பாதிப்புகள் குறித்து செய்தி கள் வெளியாகி வருகின்றன. மனித மெட்டாநியூமோ வைரஸ் (HMPV) என்று அழைக்கப்படும் இதனால் ஏற்படும் நோய்ப் பாதிப்புகள் அதிக அளவில் வடக்கு சீனாவில் பதிவாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

பெரும்பாதிப்புக்களையும்உயிரிழப்புக் களையும் ஏற்படுத்தக் கூடிய இந்த வைரஸ் இந்தியாவுக்கு வந்துவிட்டது, இலங்கையிலும் பரவி விட்டது என்றெல்லாம் செய்திகள் வெளியாவதும், இலங்கைக்கு அந்த வைரஸ் வரவே இல்லை என அரசு தரப்பில் மறுப்பு அறிக்கைகள் வருவதும் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி வருகின்றன.

முன்னைய கொவிட் தொற்றின் பாதிப்புக்களால் கதிகலங்கிப் போயிருக்கும் மக்களுக்கு இந்தத் தொற்றுப் பரவல் குறித்த செய்தி பெரும் பீதியைக் கிளப்பி இருப்பது உண்மை.

ஆனால் அந்த வைரஸ் குறித்துப் பீதியடையவோ அல்லது சமூக ஊடக செய்தி பரிமாற்றங்களினால் தவறாக வழிநடத்தப்படவோ தேவையில்லை என்று துறை சார்ந்த நிபுணர்கள் இப்போது தகவல் வெளியிடுகிறார்கள்.

இந்த வைரஸ் இலங்கைக்கு புதியதல்ல, அது ஏற்கனவே 2023 டிசம்பரில் இங்கு அடையாளம் காணப்பட்டதுதான் என்று சம்பந்தப்பட்ட துறையைச் சேர்ந்த பேராசிரியர் நீலிகா மாலவிகே கூறுகிறார்.

ஏற்கனவே இலங்கையில் பரந்த அளவில் பரவி, தொற்றுக்களை ஏற்படுத்திய இந்த வைரஸ் குறித்து இப்போது பீதி அடைவதற்கோ அஞ்சுவதற்கோ நிலைமை இல்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

முதன் முதலில் 2001 இல் நெதர்லாந்தில் அடையாளம் காணப்பட்ட இந்த வைரஸ் தொடர்ந்து பல நாடுகளில் அவ்வப்போது தலைக்காட்டி அடங்கிப் போனதுதான் என்றும் அவர் கூறுகிறார்.

இந்த வைரஸ் தொற்றுக் குறித்து அதிர்ந்து போயிருக்கும் உலகுக்கு இந்த நிபுணத்துவ ஆலோசனை சற்று ஆறுதல் தரும் என்பது நிச்சயம்.

## எதிர்வரும் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"பல்வேறு காரணிகளால் எம்மை விட்டு விலகிச் சென்றவர்கள் மீண்டும் எம்முடன் ஒன்றிணையலாம். இது தொடர்பில் உள்ளக மட்டத்தில் பேச்சில் ஈடுபட்டுள்ளோம். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூட்டணி அமைப்பது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம்." - என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், வரிகள் திருத்தம் செய்யப்படுகின்றது. காலையில்தான் வரிகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது. பொருளாதார விவகாரத்தில் அரசு எவ்வாறான நிலைப்பாட்டை கொண்டுள்ளது என்பதை அறியமுடியவில்லை.

மதுபான பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால் எனக்கொன்றும் பிரச்சினையில்லை, ஏனெனில் நான் மது அருந்துவதில்லை.

மதுபானங்களின் விலை அதிகரிக்கப்பட்டால் சட்டவிரோத மதுபான உற்பத்திகள் அதிகரிக்கப்படும். அது பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தும்.

பல்வேறு காரணிகளைக் குறிப்பிட்டுக் கொண்டு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை விட்டு விலகிச் சென்றவர்கள் இன்று அரசியலில் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள்.

விலகிச் சென்றவர்களை மீண்டும் இணைத்துக்கொள்வதற்கு அவதானம் செலுத்தியுள்ளோம். இது தொடர்பில் உள்ளக மட்டத்தில் பேச்சில் ஈடுபட்டுள்ளோம்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூட்டணி அமைப்பது குறித்து அவதானம் செலுத்தியுள்ளோம். கட்சி என்ற ரீதியில் பலமடைவதற்கான அனைத்து திட்டங்களையும் செயற்படுத்தியுள்ளோம்.

அநுர அரசின் மீதான மக்களின் நம்பிக்கை வெகுவாகச் சிதைவடைந்துள்ளது. ஆகவே, எதிர்வரும் காலங்களில் நடைபெறும் தேர்தல்கள் அரசுக்கு எதிரானதாக அமையும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் ராஜபக்ஷக்கள் மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். தற்போது அவர்தான் ஜனாதிபதி. ஆகவே எம் மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்களை ஆதாரபூர்வமாக சட்டத்தின் முன் நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு உண்டு.

நான் சட்டக் கல்லூரப் பரீட்சைக்கு தோற்றிய விதம் தொடர்பில் அமைச்சர் வசந்த சமரசிங்க நாடாளுமன்றத்தில் பாரதூரமான குற்றச்சாட்டை முன்வைத்தார்.

குற்றச்சாட்டை நிரூபித்தால் நான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பதாகக் குறிப்பிட்டேன். இதுவரை அந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை." - என்றார்.

---

## பாடசாலை மாணவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சென்று கொண்டிருந்தபோது, ஒரு சிறிய கறுப்பு வானில் வந்த குழுவினர், மாணவி ஒருவரை வலுக்கட்டாயமாகக் கடத்திச் சென்றுள்ளனர்.

உடனடியாகப் பயந்துபோன மற்றொரு மாணவி அங்கிருந்து ஓடியுள்ளார். கடத்தப்பட்ட மாணவியைக் காப்பாற்றுவதற்கு நபர் ஒருவர் முயற்சித்தபோதும் அது பலனளிக்கவில்லை.

கடத்தலுடன்தொடர்புடையவான்பொலனறுவை நகரில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், குறித்த வாகனம் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

கடத்தப்பட்ட மாணவி மற்றும் கடத்தலை மேற்கொண்ட நபர் குறித்து எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

எவ்வாறாயினும், கடத்தலில் ஈடுபட்ட நபர் கடத்தப்பட்ட மாணவியின் உறவினர் என்பது தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாணவியின் உறவினர்களால் தவுலகல பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடத்தப்பட்ட மாணவியை மீட்பதற்கும், கடத்திய நபரைக் கைது செய்வதற்குமான விசாரணை வேட்டையில் பொலிஸார் இறங்கியுள்ளனர்.

---

## எட்டு இந்திய மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 8 இந்திய மீனவர்களும் கடற்படையினரால் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், நேற்று மாலை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது 8 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.





# வாரம் முழுவதும் பணியாற்றுவதற்கு தயாராகின்றனர் சுங்க அதிகாரிகள்



சுங்கத்துறை விடுவிப்பு செயல்முறையை விரைவுபடுத்துவதற்காக இலங்கை சுங்க அதிகாரிகள் வாரத்தில் ஏழு நாள்களும் பணியாற்றவுள்ளனர்

இலங்கை சுங்கம் மற்றும் துறைமுகங்கள் தொடர்பான சேவைகளை வழங்கும் சங்கங்களுக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் இடையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த உடன்பாடு எட்டப்பட்டது.

இறக்குமதி செய்யப்படும் கொள்கலன்களின் சுங்கத்துறை விடுவிப்பில் ஏற்படும் தாமதத்தை அடுத்த நான்கு நாள்களுக்குள் முடிவுக்குக் கொண்டுவர தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இலங்கை சுங்கம் உட்பட அரசதுறையில் நிலவும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்த ஜனாதிபதி, துறைமுகம் தொடர்பான சேவைகளை வழங்கும் சங்கங்களின் பிரச்சினைகள் குறித்தும் விரிவாக ஆராய்ந்தார்.

இதன் போது துறைமுக துறையை அபிவிருத்தி செய்வதற்கான குறுகிய கால மற்றும் மத்திய கால மற்றும் நீண்ட கால திட்டங்களைச் செயற்படுத்துவது அவசியமான போதும் தற்பொழுது எழுந்துள்ள சூழ்நிலையைத் தீர்க்க, அனைவரும் இணைந்து செயற்படுவதன் அவசியம் சுட்டிக்காட்டப்பட்டது.

தற்பொழுது எழுந்த சூழ்நிலையைத் தீர்க்க, ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களின்படி, அரச மற்றும் தனியார் துறைகளுக்கு இடையே உடன்பாடு எட்டப்பட்டன.

இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களுக்கு அனுமதி வழங்கும் செயல்பாட்டில் நிலுவையில் உள்ள தேக்கத்தைத் தீர்க்க, இலங்கை சுங்க அதிகாரிகள் வாரத்தில் ஏழு நாட்களும், 24 மணிநேரமும் பணியாற்ற உடன்பாடு தெரிவித்துள்ளனர்.

பரிசோதனை மட்டத்திலுள்ள கொள்கலன்களை வைப்பதற்கான துரித நடவடிக்கையாக UCTapy; (Unity container Terminal) இடம் ஒதுக்க அமைச்சு முடிவு செய்துள்ளது.

அதற்கமைய புளூ மெண்டல் பகுதியில் 5 ஏக்கர் காணியைப் பயன்படுத்த இதன் போது முடிவு செய்யப்பட்டது.

ஜனவரி 31 ஆம் திகதிக்குள் இரண்டு ஏக்கர் நிலத்தை பெற்றுக் கொடுப்பதற்கும், எஞ்சிய நிலத்தை பெப்ரவரி 28 ஆம் திகதிக்குள் வழங்குவதற்கும் முடிவு செய்யப்பட்டது.

துறைமுக முனையத்தில் வேண்டுமென்றே கொள்கலன் வாகனங்களை நிறுத்தி வைத்திருப்பது கொள்கலன் போக்குவரத்து நெரிசல் உக்கிரமடைய காரணம் என அடையாளம் காணப்பட்டதால், இந்தக் கொள்கலன் வாகனங்களை நிறுத்துவதற்கு பேலியகொட பகுதியில் காணியொன்றை வழங்க அரசாங்கம் உடன்பாடு தெரிவித்தது.

இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களுக்கு சுங்கத்துறை விடுவிப்புக்கான நேரத்தில் பணிக்கு வராத தடயவியல் எழுதுவினைஞர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு தனியார் சங்கங்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தன.

இந்த ஊழியர்களை சரியான நேரத்தில் வேலைக்கு அழைத்து வரும் பொறுப்பு சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனங்களிடமே உள்ளது என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க வலியுறுத்தினார்.

உணவு சார்ந்த பொருட்களுக்கு வெளிநாட்டு ஆய்வகங்களிலிருந்து பெறப்பட்ட சான்றிதழ்கள் கட்டாயம் என்பதையும்,அதில் ஏதேனும் முறைகேடுகள் நடத்திருந்தால், அரசாங்க சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு இறக்குமதியாளர்கள் உடன்பாடு தெரிவித்தனர்.

துறைமுக வளாகத்திற்குள் கொள்கலன்களை சுங்கத்துறை விடுவிப்பு வரையான காலம் வரை கட்டணமின்றி தரித்து வைப்பதற்கான காலத்தை இரண்டு நாள்களாகக் குறைக்க முடிவு செய்யப்பட்டதாகவும், அடுத்த ஜூன் மாதத்திற்குப் பிறகு இதனை ஒரு நாளாகக் குறைக்க எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த அவசரகால செயல்முறையை ஜூன் 30 ஆம் திகதி வரை தொடர நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்த போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, துறைமுகங்கள், சுங்கம் மற்றும் துறைமுகம் தொடர்பான ஏனைய சேவைகளை வழங்கும் தனியார் நிறுவனங்கள் யாவும் ஒரே குடும்பமாக செயல்பட வேண்டும் என்றும் கூறினார்.

தற்பொழுது வீதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கொள்கலன் வாகனங்களுக்குபொலிஸ்பாதுகாப்புவழங்குமாறு இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற துறைமுக சேவை வழங்கும் சங்கங்கள் கோரிக்கை விடுத்தன.



# இறப்பர் உற்பத்தி குறைந்தமையால் நாட்டில் இறப்பருக்குப் பற்றாக்குறை

இயற்கை இறப்பர் உற்பத்தி குறைவடைந்துள்ளதால் தற்போது நாட்டில் இறப்பருக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாம் எண்ணெய் போன்ற ஏனைய இலாபகரமான பயிர்களுக்கு இறப்பர் செய்கை நிலங்கள் பயன்படுத்தப்படுவதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக இறப்பர் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன் காரணமாக இறப்பர் தொழில்களை நம்பியிருக்கும் தொழில்களின் உற்பத்தியினை விரிவு படுத்துவதற்கும் சந்தை வாய்ப்பினை அதிகரிப்பதற்குமான வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக டயர் உற்பத்தியாளர்கள், உலர் இறப்பரின் பற்றாக்குறை காரணமாக உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தை தேவைகளை பூர்த்தி செய்வதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றோம் என தெரிவித்துள்ளனர்.

இது தவிர, டயர் மற்றும் பிற இறப்பர் சார்ந்த தொழில்துறை பணியாளர்கள் நாட்டில் இயற்கை இறப்பரின் பற்றாக்குறை காரணமாக தங்கள் உற்பத்தி தளத்தை விரிவுபடுத்த முடியாதுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

உள்நாட்டு இறப்பரின் விலைகள் சர்வதேச விலைகளுக்கு இணையாக இருந்தால் மட்டுமே ஏற்றுமதி விடயத்தில் ஏனைய நாடுகளுடன் போட்டிபோட முடியும் என, இறப்பர் கையுறை உற்பத்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இறப்பர் உற்பத்தியினை விரிவுபடுத்துவதற்கும் மீள் நடுகை செய்வதற்கும் தேசிய திட்டம் இல்லாததன் காரணமாக அந்நிய செலாவணியை ஈட்டும் இறப்பர் சார்ந்த தொழில்களுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.



# எம்.வி. கிரிஸ்டல் சிம்பொனி சொகுசு கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது

எம்.வி. கிரிஸ்டல் சிம்பொனி எனப்படும் சொகுசு பயணக் கப்பல் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்தக் கப்பலில் 211 பயணிகளும் 417 பணியாளர்களும் வருகை தந்தனர்

மாலைத்தீவுகளில் இருந்து இந்த கப்பல் வருகை தந்துள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சஜித்துக்கு நெருக்குவாரம்

நீண்ட காலம் தொடர்ந்து அதிகாரத்துக்கு - ஆட்சிக்கு - வர முடியாத பிரதான எதிர்க்கட்சியின் தலைவராக இருந்து கொண்டு, கட்சியின் அடுத்த மட்ட மற்றும் கீழ்மட்ட தலைவர்களின் விருப்பு, வெறுப்புகளுக்கு இசைந்து போகாமல் - அல்லது அவற்றைக் கணக்கில் எடுக்காமல்-நடந்துகொண்டால்கட்சிதலைமை நெருக்கடிகளைஎதிர்கொள்வது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

அதனைத்தான் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக கடந்த 30 ஆண்டுகளாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க 2019 இல் சந்தித்தார். அவரது கட்சி அவருக்கு முன்னாலேயே பிரிந்து, கரைந்து போனது. அவரது கட்சியை சேர்ந்த முக்கியஸ்தர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கினார்கள்.

ரணிலைக் கை கழுவி விட்டால் கட்சி உருப்படும் - தேறும் - என்று அவர்களது கட்சியின் தலைவர்கள் மட்டுமல்லாமல், கூட்டணிக் கட்சித் தலைவர்களும் எதிர்பார்த்தார்கள்.

ஆனால், ஐந்து வருடங்களாகியும் விடயம் ஒப்பேறவில்லை. அக்கட்சியினர் தொடர்ந்தும் எதிர்க்கட்சியில் இருக்க வேண்டிய நிலைமை - தலையெழுத்து - நீடிக்கின்றது. ஐக்கிய மக்கள் சக்தியாக புதிய அவதாரம் எடுத்த போதும் ஆட்சி அதிகாரம் கைக்குக் கிட்டவேயில்லை.

ரணிலின் தலைமையில் கண்ட தோல்வி சஜித்தின் தலைமையிலும் தொடர்வதாகக் கருதும் அவர்கள் அதிலிருந்து மீள்வதற்காக முன்னர் கட்சியை மறுசீரமைக்கும் படி ரணிலுக்குத் தொல்லை கொடுத்தமை போல இப்போதுசஜித்பிரேமதஸவுக்கும்தொல்லை கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவம் மற்றும் பதவி நிலைகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் உட்பட பங்காளி கட்சித் தலைவர்கள் முன்வைத்த யோசனைகளை கருத்திற் கொண்டு கட்சியை மறுசீரமைப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வேறு வழியின்றி இப்போது இணங்கியிருக்கின்றார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார, கபீர் ஹாசிம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகி-யோரை உள்ளடக்கிய வகையில் ஓர் உயர்மட்டக் குழுவை நியமித்து விடயங்களை முன்னெடுக்கக் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சம்மதித்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

கட்சி மறுசீரமைப்பு தொடர்பான பரிந்துரைகளை வெகுவிரைவில் முன்வைக்குமாறு இந்தக் குழு பணிக்கப்பட்டுள்ளது. இந்த குழு இந்த வாரமளவில் கூடவுள்ளதாகவும் அறிய முடிகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு கூட்டம் அண்மையில் இடம்பெற்ற போது இந்த விடயங்கள் - கட்சி மறுசீரமைப்பு பற்றிய விவகாரங்கள் - காரசாரமாக விவாதிக்கப்பட்டிருகின்றன.

'ஐக்கிய தேசிய கட்சியை மறுசீரமைப்பதற்கு கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு தற்காலிக தீர்மானங்களை மாத்திரமே முன்வைத்தார். இதன் காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கினோம். இங்கும் அந்த தன்மையே காணப்படுமாயின் முன்னேற்றமடைய முடியாது' என்று கூட்டத்தில் காரசாரமாகக் கருத்துக் கூறப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

ரணிலுக்குத் தாம் படிப்பித்த பாடத்தை இப்போது தாம் படிக்க வேண்டிய நிலைக்கு சஜித் தள்ளப்பட்டிருக்கின்றார் என்றே தோன்றுகின்றது.

# இலங்கை அகதிகளின் பிரச்சினைகள் தொடர்பில் தமிழகத்தில் கலந்துரையாடப்பட்டது; சாணக்கியன்





சென்னையில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான உலகத் தமிழ் புலம்பெயர்ந்தோர் தினத்தின் இறுதி நாளான நேற்று தமிழகத்தில் வாழும் புலம்பெயர் இலங்கை அகதிகள் விற்பனை நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன

தென்னிந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை சங்கத்தினால் இந்தக் கண்காட்சி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

புலம்பெயர் இலங்கை அகதிகள் தொழில்துறை ஊக்கமானது மிகுந்த மனமகிழ்வை உண்டாக்குவதாக நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பல காலமாக அகதிகளாக வாழும் இலங்கையர்களை சந்தித்ததுடன் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாகவும் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இதனிடையே தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலினையும் தாம் இந்த விழாவின் போது சந்தித்ததாக சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இராசமாணிக்கம் சாணக்கியன், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.






# மு.க.ஸ்டாலினைச் சந்தித்தார் செந்தில் தொண்டமான்

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் செந்தில் தொண்டமானுக்கும் தமிழக முதல்வர் மு.க ஸ்டாலினுக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

அயலக தமிழர் மாநாடு நேற்று சென்னையில் நடைபெற்ற நிலையில், செந்தில் தொண்டமான், மு.க ஸ்டாலினைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்

இலங்கை வாழ் தமிழர்களின் வளர்ச்சி குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், கடந்த காலங்களில் இலங்கை மக்களுக்கு தமிழக முதலமைச்சர் வழங்கிய உதவிகளையும் செந்தில் தொண்டமான் நினைவுகூர்ந்துள்ளார்.



# தொண்டைமானாறு கடற்கரையில் ட்ரோன் மூலம் வீடியோ எடுக்கின்றனர் வெளிநாட்டு பிரஜைகள்

## வடமராட்சி வடக்கு சமாசத்தின் உப தலைவர் தெரிவிப்பு




“வெளிநாட்டு பிரஜைகள் சிலர் தொண்டைமனாறு கடற்கரையில் நின்று ட்ரோன் மூலம் வீடியோ எடுக்கிறார்கள். அதே போல் முல்லைத்தீவில் றோகிஞ்சியா படகு கரையொதுங்கும் வரை கடற்படைக்குத் தெரியாது போயுள்ளது. இவ்வாறு வெளிநாட்டவர் எமது கடலில் என்ன செய்கிறார்கள் என்று அவதானிக்க முடியாதவர்கள் பிறகு கிளீன் சிறீலங்கா பற்றிப் பேசி பிரியோசனமில்லை.”

– இவ்வாறு வடமராட்சி வடக்கு சமாசத்தின் உப தலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று நடாத்திய ஊடக சந்திப்பில் நா.வர்ணகுலசிங்கம் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய கடற்றொழில் அமைச்சர் ஐரோப்பிய நாடுகளுடன் பேச வேண்டும் என்று கூறியுள்ளார். இது வரை எந்த அமைச்சரும் பேசியதில்லை. இது எமக்கு சந்தேகந்தை ஏற்படுத்தியுள்ளது. ஐரோப்பிய நாடுகளை கூட்டி வந்து கடலை கூறுபோட்டு விற்கப்போகிறார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளை அழைத்து எமது கடல் வழத்தை விற்கப்போகிறீர்களா?

இது தொடர்பில் எமது கடற்றொழில் அமைப்புக்கள் மௌனமாக உள்ளமை பேரபத்தானது. அமைச்சரின் இந்த விடயம் பற்றி பேச. வேண்டும்.

கிளீன் சிறிலங்கா என்று ஒன்றைத் தொடங்கியுள்ளீர்கள் இதில் என்ன நடக்கிறது? எமது நாட்டில் கொண்டுவரப்பட்ட சட்டத்தை நடைமுறைப்படுத்தி சட்டத்தை நிரூபியுங்கள். இது தான் கிளீன் சிறிலங்கா அதை விடுத்து சுற்றுநிரூபங்களை விடுவது மட்டுமே நடைமுறையில் கொண்டு வருவதில்லை.

சட்டத்தையும் சுற்றுநிரூபங்களையும் நடைமுறைப்படுத்துங்கள் எல்லாம் கிளீனாகும்.

நாடாளுமன்றில் து.ரவிகரன் மீனவர்கள் சார்பில் இந்திய மீனவர்களினால் ஏற்படும் பிரசினை பற்றி பேசியுள்ளார். அதை வரவேற்கிறோம், பேச்சோடு நின்று விடாமல் தொடர்ந்து நடைமுறைக்கு கொண்டு வாருங்கள். பல தமிழ் அரசியல் கட்சிகளிடமும் நாடாளுமன்ற பிரதி நிதிகளிடமும் பல ஆவணங்களைக் கையளித்தோம் ஒன்றும் நடக்கவில்லை. தமிழ் அரசியல் வாதிகள் துப்புக்கெட்டவர்கள்.

கடற்றொழில் தொடர்பில் பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதை நடைமுறைப்படுத்த தொடர்ந்தும் நாடாளுமன்றில் குரல் எழுப்புங்கள்.

அடுத்து தைப்பொங்கள் வருகிறது நாம் கடலுக்குள் செல்ல முடியாத நிலையுள்ளது. இந்திய மீனவர்களது றோளர்ப் படகுகள் எமது கடலில் வளங்களை அள்ளி எமது கடல் வளம் நாசமாகிறது.

இப்போது வந்த அரசும் அமைச்சரும் நல்ல விடயங்களைப் பேசுவார்கள், நடைமுறைப்படுத்துவார்கள் என்று எதிர்பார்த்தால் அவர்களும் கதையளவிலேயே உள்ளது. ஐரோப்பாவுடன் பேசப்போகிறாராம் அமைச்சர்.

எமது கடற்பரப்பில் இடம்பெறும் உள்ளூர் மற்றும் வெளி மாவட்ட மீனவர்களின் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதை உடன் நடைமுறைப்படுத்த வேண்டும். இங்கிருக்கும் உள்ளூர் சங்கங்கள் ஏன் வெளி மாவட்ட மீனவர்களுக்கு ஒரு நடைமுறையையும் உள்ளூர் மீனவர்களுக்கு ஒரு நடைமுறையும் கொண்டுள்ளீர்கள்.

வெளி மாவட்ட மீனவர்களுக்கு உள்ளூரில் அனுமதியை வழங்குவதால் கஞ்சா கடத்தல் உட்பட போர்க்காலத்தில் கடலில் தாண்டு போயுள்ள கடற்படையினர் மற்றும் விடுதலைப் புலிகளின் படகுகளின் பாகங்களை திருடிச் செல்ல வழி திறந்து விடப்பட்டுள்ளது.

வெளி மாவட்ட மீனவர்கள், சட்டவிரோத தொழில் முறைகள் இந்திய மீனவர்களின் அத்து மீறல்களால் கடல்வளம் அழிக்கப்படுகிறது. நாசம் செய்யப்படுகிறது. கடல் பகுதிகளில் பிளாஸ்ரிக் கழிவுகளால் ஆக்கிரமிக்கப்பட்டு கடல்வளம் நாசமாகப்பட்டுள்ளது. இதைக் கிளீன் செய்யுங்கள் கிளீன் சிறீலங்கா என்றால் இதைக் கிளீன் செய்யுங்கள்.

கடந்த சில நாள்களுக்கு முன் வெளிநாட்டு பிரஜைகள் சிலர் தொண்டைமனாறு கடற்கரையில் நின்று ரோன் மூலம் வீடியோ எடுக்கிறார்கள். அதே போல் முல்லைத்தீவில் றோகிஞ்சியா படகு கரையொதுங்கும் வரை கடற்படைக்குத் தெரியாது போயுள்ளது. இவ்வாறு வெளிநாட்டவர் எமது கடலில் என்ன செய்கிறார்கள் என்று அவதானிக்க முடியாதவர்கள் பிறகு கிளீன் சிறீலங்கா பற்றிப் பேசி பிரியோசனமில்லை .” – என்றார்.

# பேஸ்புக் ஊடாக விடுதியொன்றில் விருந்து ஏற்பாடு செய்த 10 பேர் கைது

பொலன்னறுவை – பெதிவெள பகுதியில் உள்ள தனியார் விடுதியொன்றில் இடம்பெற்ற விருந்து ஒன்றின் போது, மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் பேஸ்புக் ஊடாக இந்த விருந்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர் என பொலிஸ் தெரிவித்துள்ளது.



இதன்போது, சட்டவிரோதமாக வைத்திருந்த 45 வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு மதுபான போத்தல்களும், 550 மில்லிகிராம் கொக்கைன் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸ் தெரிவித்துள்ளது.

கைதானவர்கள் 18 முதல் 30 வயதுக்கிடைப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் பொலன்னறுவை நீதவான் நீதிமன்றில் பிரசன்னப்படுத்தப்படவுள்ளனர்.

# 'வேர்களைத் தேடி' திட்டம்; எனது அரசியலில் மைல்கல்

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு







"வேர்களைத் தேடி திட்டம் எனது அரசியல் வாழ்க்கையில் ஒரு மைல் கல். திராவிட இயக்கக் கோட்பாடுகளுக்கு கிடைத்த பெரும் வெற்றி, இந்த 'வேர்களைத் தேடி' திட்டம்."

– இவ்வாறு தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நேற்று நடைபெற்ற அயலகத் தமிழர் தின நிகழ்வில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது முதல்வர் ஸ்டாலின் மேலும் உரையாற்றுகையில்,

"நான் முதலமைச்சரானதிலிருந்து, ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர், ஜப்பான், ஸ்பெய்ன், அமெரிக்கா என்று உலகத்தின் எந்த பகுதிக்கு சென்றாலும், தாய்மண்ணில் இருக்கும் உணர்வை அயலகத்தில் வாழும் தமிழர்கள் எனக்கு ஏற்படுத்தினார்கள். இப்போது அதை நினைத்துப் பார்த்தாலும் நெகிழ்ச்சியாக இருக்கிறது. அதிலும், அமெரிக்கப் பயணத்தில் எனக்கு அளித்த வரவேற்பை நினைத்துப் பார்க்கிறேன்.

தமிழ்நாட்டின் முதலமைச்சராக, அயலகத் தமிழர் நாள் நல்வாழ்த்துகளையும் உலகத் தமிழருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கு கூடியிருக்கும் பலரின் முன்னோர்கள் நூறு, இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு பல்வேறு காரணங்களுக்காக தாய்மண்ணில் இருந்து சென்று இருப்பார்கள். இந்தப் பூமிப்பந்தின் வெவ்வேறு நாடுகளுக்கும் சென்று தங்களின் ஓய்வறியாத உழைப்பு, தியாகம், வியர்வை, கண்ணீர் சிந்தி அந்த நாடுகளை வளர்த்தார்கள். அவர்களால்தான், பாலைகள் சோலைகள் ஆனது. கட்டாந்தரைகள் தார்ச்சாலைகள் ஆனது. அலைகடல்களில் துறைமுகங்கள் உருவானது. தேயிலைத் தோட்டங்கள் – ரப்பர் தோட்டங்கள் – கரும்புப் பயிர்கள் செழித்து வளர்ந்தன் அந்த நாடுகளும் வளம் பெற்றது.

நான் இதைச் சொல்லும்போது, நீங்கள் கடந்து வந்த பாதை, பட்ட துன்பங்கள் அடைந்த உயரங்கள் என்று உங்களின் நினைவுகள் நிச்சயம் உங்கள் குடும்ப வரலாற்றை எண்ணிப் பார்க்கும். அப்படிப்பட்ட தமிழ்த்தியாகிகளின் வாரிசுகளான உங்களை உறவாக அரவணைத்துக்கொள்ள தமிழ்நாடு இருக்கிறது. நான் இருக்கிறேன். அதைப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. நீங்களும் தமிழ்நாட்டை மறக்கவில்லை. தமிழ்நாடும் உங்களை மறக்கவில்லை.

இதுதான் தமிழினத்தின் பாசம். அதனால்தான், அயலக மண்ணில் குடியேறினாலும், உங்கள் முன்னோர்களும் – நீங்களும் தமிழை வளர்க்கிறீர்கள். இப்படி அயலக மண்ணிலும் தமிழுக்காகப் பாடுபட்ட சான்றோர்களின் வழித்தோன்றல்கள் மற்றும் அண்மைக்காலங்களில் வெளிநாடுகளுக்கு சென்று இந்தியா வளமாக வாழ அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் தமிழ்ச்சொந்தங்களுக்கு நன்றி.

நான்காவது ஆண்டாக இந்த நிகழ்ச்சியை நடத்துகிறோம். ஏதோ ஒன்று கூடினோம். பழம்பெருமைகளைப் பேசினோம் என்று நாம் கலைந்து போகவில்லை. கடந்த காலங்களில் தீட்டிய திட்டங்களின் செயல்பாட்டை ஆராய்ந்து நிகழ்கால வளர்ச்சிப் போக்கை ஆய்வு செய்து, எதிர்காலத்தில் அயலகத் தமிழர்கள் மேலும் சிறப்பாக வாழ்வதற்கான திட்டங்களை உறுதிப்படுத்துகிறோம். அதற்காகத்தான் ஒரு குடையின்கீழ் இயங்குகிறோம்.

அயலகங்களில் குடிமக்களாக வாழும் தமிழர்களும், அயலகங்களுக்குச் சென்று உழைக்கும் தமிழ்நாட்டுத் தமிழர்களும் வளமாக வாழத்தான் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஓய்வில்லாமல் உழைக்கிறது. நிலமெங்கும் நிறைந்திருக்கும் அனைத்து தமிழர்களுக்காகவும் செயல்பட்டு, உங்களின் இதயங்களை ஆளும் அரசாக நம்முடைய திராவிட மாதிரி அரசு விளங்குகிறது.

உலக மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்காகவும், சமூக முன்னேற்றத்திற்காகவும், கல்வி, அறிவியல், தொழில்நுட்பம், வணிகம் ஆகிய துறைகளில் சாதனை படைக்கும் நம் தமிழர்களைத் தேர்ந்தெடுத்து, "உலகம் யாவும் ஒன்றே"-என்று முழங்கும் தமிழ் கணியன் பூங்குன்றனார் பெயரில் விருது. இப்போது, இந்த மேடையில், ஆறு முக்கிய துறைகளில் முத்திரை பதித்த சாதனைத் தமிழர்களுக்கு நான் விருதுகளை வழங்கியிருக்கிறேன்.

அதற்கு மணிமகுடமாக, அயலகத் தமிழர்களில் பன்முகத்தன்மையோடு விளங்கும் ஒரு தமிழரைத் தேர்ந்தெடுத்து, தமிழ்மாமணி விருதும் பட்டயமும் வழங்கியிருக்கிறோம். அயல்நாட்டுத் தமிழர்கள் மற்றும் தமிழ்ச்சங்கங்களுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையே உறவுப்பாலமாக செயலாற்றும் அயலகத் தமிழ் இளைஞர் ஒருவருக்கு, சிறந்த பண்பாட்டுத் தூதுவர் என்ற விருதையும் இந்த ஆண்டு முதல் வழங்கியுள்ளோம். இந்த விருதுகளை எல்லாம், இந்தாண்டு பெற்ற அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதுபோன்ற விருதுகள் மூலம், பண்பாட்டுத் தூதுவர்களை உருவாக்கி,உலகெங்கும்உள்ளதமிழ்சொந்தங்களோடு உறவுப் பாலம் அமைப்போம். இது எல்லாவற்றையும்விட, என் மனதுக்கு நெருக்கமான ஒரு திட்டம் இருக்கிறது. அதுதான், பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் புலம் பெயர்ந்த தமிழர்களின் வழித்தோன்றல்களை, தமிழ்நாட்டுக்கு அழைத்து வந்து, அவர்களின் வேர்கள் பரவியிருக்கும் கிராமங்களை அடையாளம் காட்டும் "வேர்களைத் தேடி" திட்டம்.

தமிழ் மண்ணில் அவர்களின் சொந்தங்களை கண்டுபிடித்து, கண்ணீர் மல்க பாசத்தை கொட்டிய சிலிர்ப்பூட்டும் அனுபவங்களை உருவாக்கிய திட்டம் தான் இது. இன்னும் சொல்லவேண்டும் என்றால், என் அரசியல் வாழ்க்கையில் இந்தத் திட்டம் ஒரு மைல்கல். திராவிட இயக்கக் கோட்பாடுகளுக்கு கிடைத்த பெரும் வெற்றி, இந்த 'வேர்களைத் தேடி' திட்டம். இந்தத் திட்டத்தில், இதுவரை இரண்டு பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு, 157 இளைஞர்கள் தாய் மண்ணுக்கு வந்திருக்கிறார்கள். அதில் 38 இளைஞர்கள் பயணத்தின் இறுதி நாளான இன்றைக்கு நம்முடைய இந்த அரங்கில் இருக்கிறார்கள். இந்தப் பயணமும் உறவும் என்றென்றும் தொடரவேண்டும் என்று நான் விரும்புகிறேன்." – என்றார்

# மீனவர்களை விடுவிப்பதற்கு வலுவான நடவடிக்கை தேவை

## மத்திய அரசுக்கு தமிழக முதல்வர் கடிதம்





,லங்கை கடற்படையால் சிறை பிடிக்கப்பட்ட ,ராமேஸ்வரத்தை சேர்ந்த 8 மீனவர்களை விடுவிக்க உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.


அந்தக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற தமிழகத்தைச் சேர்ந்த 8 மீனவர்கள் பாரம்பரிய மீன்பிடிப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது எல்லை தாண்டி மீன்பிடித்ததாக நேற்று இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட வலுவான மற்றும் பயனுள்ள தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்துகிறோம்.

இலங்கை கடற்படையினரால் நமது மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருது வருத்தம் அளிக்கிறது. இலங்கை கடற்படையினரால் நமது மீனவர்கள் அடிக்கடி சிறைபிடிக்கப்படுவதால், மீனவ சமுதாயத்தினரிடையே அச்சத்தையும், நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது. அவர்களது பாரம்பரிய வாழ்வாதார வருவாய் ஆதாரங்கள் பாதிக்கப்படுகிறது.

எனவே மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுப்பதற்கு உரிய தூதரக நடவடிக்கைகள் மூலம் நிரந்தர தீர்வு காண வேண்டியது அவசியம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# டுபாயில் நடைபெற்ற கார் ஓட்டப் பந்தயம்; அஜித்குமாரின் அணிக்கு மூன்றாவது இடம்!




டுபாயில் நடைபெற்ற 24H சீரிஸ் கார் ஓட்டப் பந்தயத்தில் அஜித் குமாரின் அணி மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது.

இதற்கமைய தனது அணி 3 ஆவது இடத்தை பிடித்துள்ள நிலையில் நடிகர் அஜித் குமார் இந்தியத் தேசியக் கொடியுடன் வலம் வந்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த ஓட்டப் பந்தயத்தில் பங்கேற்க நடிகர் அஜித் குமார் தயாராகி வந்த நிலையில், இறுதி நேரத்தில் அவர் பந்தயத்திலிருந்து விலகிக் கொண்டார்.

எனினும் அஜித் குமாரின் அணி இதில் பங்கேற்று மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது.

இந்தநிலையில், இந்த வெற்றிக்குத் தமிழ் திரையுலகைச் சேர்ந்த பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.



# லொஸ் ஏஞ்சலிஸ் காட்டுத் தீயில் பலியானோர் 16 ஆக அதிகரிப்பு!

லொஸ் ஏஞ்சலிஸ் காட்டுத் தீயினால் மரணித்தவர்களின் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இது தவிர 12,000 கட்டடங்கள் முற்றாக அழிவடைந்து அல்லது சேதமடைந்துள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈற்றன் மற்றும் பலிசேட்ஸ்க்ஸ் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீப்பரவல் மேலும் விரிவடைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அந்த பிரதேசங்களில் உள்ள மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அதிகாரிகள் கோரியுள்ளனர்.

பலிசேட்ஸ் காட்டுத் தீ, இதுவரை 22,600 ஏக்கர் பயிர்ச் செய்கைகளை அழித்துள்ளதுடன், 14,000 ஏக்கர் பயிர்ச் செய்கை காணிகள் ஈற்றன் பகுதியில் அழிந்து போயுள்ளன.

இந்த பிரதேசங்களில், பெரும் பிரயத்தனத்திற்கு மத்தியில் தீயணைக்கும் படையினர் 11 முதல் 15 சதவீதமான தீயினை நேற்று காலை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர்.

இதனிடையே, மேற்படி பகுதியில் எதிர்வரும் புதன்கிழமை வரை காற்றின் வேகமானது 120 கிலோமீட்டராக இருக்கும் என வானிலை ஆய்வாளர்கள் கணிப்பிட்டுள்ளனர்.

இதன் காரணமாக எதிர்வரும் நாள்களில் நிலைமை மேலும் மோசமாக இருக்கும் என 'ரைம்ஸ்' செய்தித்தாள் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இந்த அழிவு காட்சிகள் போர்க்களம் போல இருப்பதாக விபரித்துள்ளார்.

இதனிடையே, மக்கள் வெளியேறிய பிரதேசங்கள் அனைத்திலும் கொள்ளையினை தடுக்கும் நோக்கில் ஊரடங்கு சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், கொள்ளையில் ஈடுபட்ட சுமார் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என குறிப்பிட்டுள்ளனர்.

அதிகரித்து வரும் பொதுமக்களின் விரக்திக்கு மத்தியில், கலிபோர்னியாவின் ஆளுநர், மாநிலத்தின் தயார் நிலை மற்றும் மீட்பு நடவடிக்கைகள் குறித்து சுயாதீனமாக மறு ஆய்வுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஆரம்பக்கட்ட தீயணைப்பு முயற்சிகளின் போது, ஏற்பட்ட தண்ணீர் பற்றாக்குறை குறித்து பொதுமக்கள் சீற்றம் கொண்டுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களைக் கண்டறியும் நோக்கில், பயிற்றப்பட்ட நாய்களுடன் கூடிய மீட்புக் குழுக்கள் இடிபாடுகளை ஆராய்ந்து வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியாவின் மீட்பு மற்றும் தீயணைப்புப் பணிகளில் கனடா மற்றும் மெக்சிக்கோ ஆகிய நாடுகளும் இணைந்துள்ளன.

மொத்தமாக 14,000 தீயணைப்பு வீரர்கள் இரவு பகலாகக் களத்தில் பணியாற்றி வருகின்றனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# காசாவின் ஜபாலியாப் பகுதியில் இஸ்ரேல் தாக்குதல்; 10 பேர் பலி

காசாவின் வடக்கு ஜபாலியா பகுதியில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அந்த தாக்குதலில் 10 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்தநிலையில், ஹமாஸினால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள 33 கைதிகளை விடுவிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக இஸ்ரேலின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



# இன்றைய ராசி பலன்கள் - 13.01.2025




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை பெற்றுத் தரும். புனித யாத்திரை ஒன்றை மேற்கொள்வீர்கள். அது உங்களுக்கு திருப்தி உணர்வை அளிக்கும்.

நீங்கள் மிகவும் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு அங்கீகாரமும் பாராட்டும் கிடைக்கும்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்கள் துணையுடன் அன்பாக இருப்பீர்கள். உங்கள் உறவினர்களிடம் கலந்தாலோசித்து உங்கள் திருமணத்துக்காகத் திட்டமிடலாம்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சனையும் காணப்படாது. இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சுறுசுறுப்பாக காணப்படுவீர்கள். வெற்றி காண கடினமாக உழைக்க வேண்டும். சிறந்த தகவல் தொடர்பாடல் மூலம் நீங்கள் நல்ல பலனைப் பெறலாம்.

பணியிடச் சூழல் இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் பேச்சின் மூலம் சிறந்த வளர்ச்சி பெறுவீர்கள். இது உங்களுக்கு வழி காட்ட உதவும்.

இன்று கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் காதலுக்கு உகந்த நாள் அல்ல. காதல் பாதிக்காமல் இருக்கவும் நன்கு வளரவும் புரிந்துணர்வு அவசியம்.

வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். வருவதைக் கொண்டு நிர்வகிக்க வேண்டும்.

பதற்றம் காரணமாக தோள் வலி மற்றும் எரிச்சல் காணப்படும். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று சாதாரணமான நாள். நீங்கள் பெரியவர்களைக் கூட மகிழ்விக்கும் இனிமையான வார்த்தைகளை பேசுவீர்கள். இறை மந்திரங்கள் சொல்வது இசை கேட்பது மன ஆறுதலை அளிக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்களுக்கு புதிய பணிகள் கொடுக்கப்படும். அது சவால்கள் நிறைந்ததாக இருக்கும்.

உங்கள் தந்தையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். குடும்ப அங்கத்தினர்களின் நல்லாதரவு பெறுவீர்கள். இன்று காதலர்களுக்கு உகந்த நாள் அல்ல.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இன்று கணிசமான தொகை பராமரிப்பீர்கள்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று மிகவும் சிறப்பான நாளாக காணப்படாது. இன்று உங்கள் செயல்களை சிறப்பாக திட்டமிட வேண்டும். எந்த செயலையும் செய்வதற்கு முன் நன்கு யோசிக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். எதற்கும் உணர்ச்சி வசப்படாதீர்கள்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் அதிக பணிகளை சுமக்க நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் காதலை வெளிபடுத்த இது உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் இன்று அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக காணப்படாது. இன்று அதிக செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




உங்கள் செயல்களை சீராக மேற்கொள்வதில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பது நல்லது.

உங்கள் பணிகள் பாராட்டைப் பெறும். உங்கள் பணிகளை நீங்கள் அனுசரித்து கவனமாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் சிறப்பான நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் காதலருடன் உங்கள் வாழ்கைக்கு திட்டமிடும் நாள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிக்க இயலும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் நம்பிக்கை எண்ணம் காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தில் பிரதி பலிக்கும்.




வெற்றி பெறுவதற்கான தைரியமும் உறுதியும் உங்களிடம் காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் பணிகளை திறமையுடன் ஆற்றுவீர்கள். உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள்.

காதலில் அன்பு மிகுந்து காணப்படும். உங்கள் துணையுடன் உங்கள் எதிர் கால வாழ்க்கைக்கு திட்டமிட உகந்த நாள்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு நீங்கள் ஊக்கத் தொகை பெறுவீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்றைய நாள் சராசரிக்கும் அதிகமான பலன்களை அளிக்கும். உங்கள் புத்திசாலித்தனத்தை நன்கு பயன்படுத்துவீர்கள். உங்கள் தரத்தை மேம்படுத்தவும் வெற்றி பெறவும் நீங்கள் முயற்சி எடுக்கலாம்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. நீங்கள் உங்கள் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருப்பீர்கள்.

உங்கள் துணையை சந்தித்து உங்கள் உறவை மேம்படுத்த முயல்வீர்கள். உங்கள் துணையுடன் வெளிப்படையக இனிமையான வார்த்தைகளை பேசுவது சிறந்தது.

நீங்கள் சம்பாதித்த பணத்தை ஆன்மீகக் காரியங்களுக்காக பயன்படுத்துவீர்கள். இதன் மூலம் மனதிருப்தியை அடைவீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று மந்தமான நாளாக இருக்கும். உங்கள் உணர்ச்சி மற்றும் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக முடிக்க நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் தாயுடன் கருத்து வேற்றுமை ஏற்படலாம்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று சில அசௌகரியங்கள் காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். தூக்கமின்மை பாதிப்பு அல்லது தோல் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 13.01.2025




எதிர்பாராத வகையில் நன்மை கிடைப்பதற்கான வாய்ப்புள்ள நாள். இன்றைய சூழ்நிலைகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

இன்று பணியில் உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். நீங்கள் மிகவும் கவனமுடன் பணியாற்றுவீர்கள்.

இன்று உங்கள் காதலருடன் திருமணம் நடக்க வாய்ப்புள்ளது. என்றாலும் சரியான பாதையில் முயற்சிக்க வேண்டும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று முழுவதும் நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்..




இன்று சராசரிக்கும் அதிகமான பலன்கள் கிடைக்கும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் நீங்கள் மன திருப்தி பெற இயலும்.

உங்களின் பணிகள் எந்த தடையும் இல்லாமல் நடக்க இன்று நீங்கள் பொறுமையை இழக்காமல் புத்திசாலித்தனத்துடன் செயல்பட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியான அனுபவமாக இருக்கும்.

பங்கு வர்த்தகம் போன்ற புதிய முதலீடுகள் திருப்தி அளிக்கும். இவற்றின் மூலம் திருப்தியான பண வரவு காணப்படும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று உங்களுக்கு சுமாரான பலன்கள் கிடைக்கும். உங்கள் மனதில் தேவையற்ற குழப்பங்கள் காணப்படும். இன்று அனுசரித்துப் போவது நல்லது. எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் இன்று சிறப்பாக பணியாற்றுவீர்கள். என்றாலும் சக பணியாளர்களுடன் வாக்குவாதங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது.

உங்கள் காதலருடன் இனிமையான தருணமாக காணப்படாது. வாக்குவாதம் எழ வாய்ப்புள்ளது.

நிதி நிலைமையில் மிதமான வளர்ச்சி காணப்படும். இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று சற்று மந்தமான நாள். எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் யோசிக்க வேண்டும். பலன்கள் நீங்கள் எதிர்பார்த்தபடி காணப்படாது. நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும். அதிகப் பணிகள் மற்றும் கவனக் குறைவே இதற்குக் காரணம்.

உங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் காதலருடன் சண்டை ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையிடம் வெளிப்படையாக அணுகுங்கள்.

இன்று பண விரயம் காணப்படும். தேவையற்ற செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

குழந்தைகளின் ஆரோக்கியம் கவலை அளிக்கும்.



# கைவிடப்பட்ட வீட்டுத்திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தீர்மானம்

இடைநடுவே கைவிடப்பட்டுள்ள 12 அரச வீட்டுத்திட்டங்களின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிக்க நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபை, வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட பல நிறுவனங்களின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த வீட்டுத்திட்டங்களில் சுமார் 4000 வீடுகள் அமைந்துள்ளன.

சிக்கலுக்குள்ளான ஒப்பந்ததாரர்களுக்கு பதிலாக புதிய ஒப்பந்ததாரர்கள் மூலம் கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.